(திருவாளர்கள் கே. சுப்பராயன், ஜே. ஹேமச்சந்திரன், மற்றும் அ. ரகுமான்கான் ஆகியோர் எழுந்து நின்றனர்.)

MR. SPEAKER: I will record the objections of the three hon. members.

டிபேட் வரும்போது நீங்கள் பேசலாம். இப்போது யாரும் இதில் பேசமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப் படுத்தல்) இரண்டாம் திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(உ) சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப் படுத்துதல்) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''1987 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர்ப்பகுதி நிலத்தடி நீர் (முறைப்படுத்துதல்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

1987 மே 11]

(முற்பகல் 10–10)

(ஊ) இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்."

திரு. ஜே. ஹேமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேருந்துகளை அதனுடைய வெயிட்டின் அடிப்படையில் வரி போடுவதற்கு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே ஏற்கனவே இருந்த வரியை விட அதிகமாக வரி உயர்த்தப்பட்டிருக்கிறது என்பது ஒரு அம்சம். ஆனால், இந்த வரி உயர்வு காரணமாக வசதி உள்ளவர்கள் மட்டும் அல்ல, பேருந்துகளைப் பொறுத்த அளவில் நடுத்தர மக்களும் ஓரளவிற்கு ஏழை மக்கள் கூட அவர்களுடைய வாழ்க்கைக்காக அவர்களுக்கு இருக்கும் எல்லா வசதிகளையும் பயன்படுத்தி கடன் போன்ற மற்ற ஏற்பாடுகளைப் பயன்படுத்தி, அதிகமான வட்டி கொடுத்து இன்றைக்கு பேருந்துகளை வாங்கிக்கொண்டிருக்கிறவர்கள் பாதிக்கப்படுவார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத முறையில் இந்த வரி வரவேண்டும் என்பதுதான் எங்களுடைய கருத்து. அதே போன்று மோட்டார் வாகனங்களைப் பொறுத்த அளவில் வரி வசூலிக்கக்கூடிய நேரத்தில் இந்த மோட்டார் வாகனங்கள் காரணமாக சாலைகள் பழுதடையக்கூடிய நிலை ஏற்படுகின்றது. சாலைகளைப் போதுமான அளவிற்குப் பராமரிப்பதற்கு நிதியை அரசு ஒதுக்கவில்லை என்பது ஒட்டுமொத்தமான புகாராக இருக்கின்றது. இன்று சாலைகளைப் பராமரிப்பதற்கு பல நகராட்சிகளுக்கும், நகர மன்றங்களுக்கும், பேரூராட்சிகளுக்கும் முடியாத நிலை இருந்துகொண்டிருக்கின்றது. அந்த இடங்களிலே இப்படி வசூலிக்கக்கூடிய மோட்டார் வரியிலிருந்து ஒரு அளவு நிதி உதவியை அவர்களுக்குக் கொடுக்க முடியுமா என்பதைப்பற்றி அரசு பரிசிலிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டத்தைப் பொறுத்த வரையில் இன்று அதிகமான வரியை நாம் வசூலிக்கக்கூடிய நேரத்தில் இந்த பேருந்தினால் பழுதடைவது சாலைகள்தான் என்பதை நாம் மறந்துவிட முடியாது. சாலைகள் நல்ல முறையில்

---

*1987ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பராமரிக்கப்பட்டால்தான் இந்த பேருந்துகள் ஓடுவதற்கு வசதி செய்ய முடியும். ஆகவே, பல இடங்களில் கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் இரண்டு பருவமழை காரணமாகவே சாலைகள் கடுமையாக கெட்டுப்போகக்கூடிய நிலை ஏற்படு கின்றது. அந்தச் சாலைகளை 5, 6 ஆண்டுகளுக்குப் பிறகும் கூட சரியாகப் பராமரிக்க முடியாத நிலை இருந்துகொண்டிருக்கின்றது. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் இதுசம்பந்தமாக பிரச் சினை எழுப்பப்பட்டால் நெடுஞ்சாலைத் துறையைச் சார்ந்த வர்கள் என்ன சொல்கிறார்கள் என்றால் எங்களுக்கு சாலை களின் குறைந்த பட்ச பராமரிப்புக்குத் தேவையான பணம் கூட ஒதுக்கப்படவில்லை. ஆகவே, எங்களால் அதைச் செய்ய முடிய வில்லை என்கிறார்கள். ஆகவே, இன்று மோட்டார் வாகனங் கள் சம்பந்தமாக வசூலிக்கக்கூடிய வரியிலிருந்து, இந்த சாலை களை பராமரிப்பதற்கு, நெடுஞ்சாலைத் துறைக்கோ அல்லது நகராட்சிகளுக்கோ, நகர மன்றங்களுக்கோ நிதியுதவி செய்யக் கூடிய முறையில் சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரு வதற்கு அமைச்சர் அவர்களும், அரசும் முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தை அமுல்படுத்தக்கூடிய நேரத்தில் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல ஏழை எளிய நடுத்தர மக்கள் இந்த வரி உயர்வின் காரணமாக கடுமையாக பாதிக்கப் படாத நிலையை ஏற்படுத்தி அவர்களைப் பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்று இன்னொரு அம்சம், இந்த வாகனங்களைப் பொறுத்த அளவில் கூட, பழு தடைந்த வாகனங்களை இப்பொழுது ஓட்டுவதன் காரணமாக பல பிரச்சினைகளும், சாலை விபத்துக்களும் ஏற்பட்டுக்கொண் டிருக்கின்றன. இப்படி நாம் ஒரு புதிய சட்டத்தைக் கொண்டு வந்து வரி விதிக்கக்கூடிய நேரத்தில் கண்டெம் செய்யப் பட்டு சாலையிலே ஓட்டுவதற்கு தகுதியில்லாத வண்டிகளை ஓட் டுவதைத் தடுக்கக் கூடிய முறையிலே நடவடிக்கை எடுக்க வேண் டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முன் வந்து சில கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக இந்த வரி உயர்வின் காரணமாக நடுத்தர மக்கள் பாதிக்கப்படு வார்கள் என்ற ஒரு அச்சத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள். எனவே, அதற்கான வாய்ப்பு இல்லை என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே வருகிற வருமானம் மிக அதிகமான அளவில் கூடியிருக்கிறது என்று சொல்லிவிட முடி யாது. 10 கோடி ரூபாய் அளவில் தான் வரி உயர்வை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது என்பதையும் அதிலே வருகிற வரு மானம் கூட பல்வேறு பொது நல காரியங்களுக்காக செலவிடப் படுகிற நோக்கத்தோடு இந்த வரி உயர்வு செய்யப்பட்டிருக்கிறது என்ற காரணத்தால் இதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

[1987 மே 11] [திரு. சு. முத்துசாமி]

அதோடு வாகனங்கள் மூலமாக வசூலிக்கப்படுகிற வரியிலிருந்து சாலைகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும் என்ற உணர்வைத் தெரிவித்து இருக்கிறார்கள். இந்த அரசைப் பொறுத்தவரையில் சாலைப் பராமரிப்பில் மிகவும் அக்கறையோடு செயல்படுகிறது. ஆனால், பல்வேறு பிரச்சினைகள் நம்மை எதிர்நோக்கி இருக்கிற காரணத்தாலும் வறட்சி நிலை காரணமாகவும் நிறைய நிதி ஒதுக்கீடு, அடிப்படைத் தேவைகளுக்காக செய்யப்படுகிற சூழ்நிலையில் சில நேரங்களில் பணத்தை ஒதுக்க முடியாத நிலை கூட ஏற்பட்டு விடுகிறது. இருந்தாலும் இந்த வரி உயர்விலே நிச்சயமாக ஒரு பங்கை சாலைப் பராமரிப்பிற்கான நிலையை ஏற்படுத்துவதற்காகக் கொடுக்க இருக்கிறார்கள் என்று நிச்சயமாக நீங்கள் நம்பலாம். எனவே, காரியங்களைச் செய்வதற்காக பொது நோக்கோடு, பொது நன்மைக்காக செய்யப்பட்டு இருக்கின்ற இந்தக் காரியத்தை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் வரவேற்பார்கள், வரவேற்க வேண்டும், இதற்கு ஆதரவு தரவேண்டும் என்று கேட்டு விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி :—

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1987) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியனவ பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (மோட்டார் வண்டிகள்) வரிவிதிப்பு (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பெற்றது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS